**தேதி :** 08.10.2025 **SC.No. :** 344/2021 PW :**2** முத்துராஜப்பா

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல்விசாரணையில் கூறியவாறு தான் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது கூறியுள்ளேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் ரோல் கால் அரை மணி நேரம் நடக்கும். ஆய்வாளர் என்னை விசாரித்தபோது, டூட்டி ரிஜிஸ்டர், பொதுநாட்குறிப்பு, பாக்கெட் டைரி, பி–டிக்கெட் ஆகியவற்றை ஒப்படைத்தேன். கருப்பசாமிகோவிலுக்கு வடபுறம் ஒரு மைதானம் உள்ளது என்றால் சரிதான். கிழக்கு பக்கமும் மைதானம் உள்ளது. 2 மைதானத்திற்கும் நடுவில் அருணாப்பேரிக்கு போகும் ரோடு உள்ளது என்றால் சரிதான். நான் நடந்ததாக சொல்லியுள்ள சம்பவம் எந்த மைதானத்தில் நடந்தது என்று குறிப்பிட்டு நான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பாட்டு கச்சேரி இரவு 10.30 மணி வரை நடந்தது. அங்கு 3000 பேர்கள் வந்தார்கள் என்றால் 1500 பேர்கள் வந்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ஒரு ஏக்கர் இருக்கும்.

மைதானத்தின் எந்தப்பகுதியில் சம்பவம் நடந்தது என்று என்னுடைய முதல்விசாரணையிலும், ஆய்வாளர் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் பாட்டுக்கச்சேரிக்கு இடையூறு செய்ததாக பொதுமக்களோ, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களோ எழுத்து மூலமாகவோ, வாய்மொழியாகவோ புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் பாட்டுக்கச்சேரிக்கு இடையூறு செய்யாததினால் தான் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவநாளில் இரவு 09.45 மற்றும் 10.00 மணிக்கு நடந்ததாக சொல்லும்

சம்பவத்திற்கு பிறகு நானோ, அ.சா.1 அருணாகரனோ பாவூர்சத்திரம் காவல்நிலையத்திற்கு போன் செய்து, தகவல் சொல்லி கூடுதல் போலீசாரை அனுப்ப கேட்கவில்லை என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறாததினால் காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை பிடிக்க நாங்கள் முயற்சி செய்தோம். சம்பவயிடத்திலிருந்து பாவூர்சத்திரம் காவல்நிலையம் 2 கி.மீ தூரத்தில் உள்ளது. இருசக்கரவாகனத்தில் 5 நிமிடத்தில் சென்று விடலாம். சம்பவநாளன்று பாவூர்சத்திரம் காவல்நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை. நான் சொன்னது போல், சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் இருவரும் பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் நடைபெறும் தவறுகள் சம்பந்தமாக உயர் காவல் அதிகாரிகளுக்கு தகவல் கொடுப்பார்கள் என்றாலும், அதனால் பாவூர்சத்திரம் காவல்நிலைய காவலர்களுக்கு எதிரிகள் மீது கோபம் இருந்தது என்றாலும் சரியல்ல. பாவூர்சத்திரம் காவல்நிலைய உயர் அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் பின்யோசனை செய்து, பொய்யாக புனையப்பட்ட இந்த வழக்கிற்காக எங்கள் மேலதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவநேரத்தில் நானும், அ.சா.1ம் காவல்நிலைய பணி எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னையும், அ.சா.1யும் ஏசவோ, மிரட்டவோ, அரசு பணியை தடுக்கவோ, தாக்கவோ செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.09 11:18:56 +0530